Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 92/2020 |
| Police station | : | |
| Deposition of witness for Prosecution | : | Lw1 / PW 1 |
| Name | : | Philowminraj (Sub Inspector) |
| Father Name/Husband Name | : | Michael |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 23.06.2022.

**மு.வி.** நான் தற்போது உதவி ஆய்வாளராக விழுப்புரம் இரயில் நிலையத்தில் உள்ள இரயில்வே பாதுகாப்பு படையில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31.12.2019 அன்று கடலூர் துறைமுகத்தில் உள்ள இரயில்வே பாதுகாப்பு படையில் பணியில் இருந்தபோது திருச்சிகோட்ட இரயில்வே பாதுகாப்பு படை குற்றப்புலனாய்வு பிரிவு மற்றும் குற்றத்தடுப்பு பரிவு அவர்களால் இரயில்வே பொருட்களை ஆஜர் எதிரி விற்பதாக கொடுத்த தகவலின்பேரில் ஆஜர் எதிரி கடலூர் மாவட்டம் குள்ளஞ்சாவடியில் நடந்திவரும் அவருடைய கடையை சோதனை செய்வதற்காக கனம் குற்றவியல் நீதிமன்றம் நடுவரை அனுகி சோதனை உத்தரவை பெற்று அன்றைய தினமே கடலூர் மாவட்டம் குள்ளஞ்சாவடி ஆலப்பாக்கம் மெயின் ரோட்டில் உள்ள மளிகை கடையில் சோதனை செய்ய குற்றத்தடுப்பு திரு. சஞ்சய் பனிக்கர் மற்றும் குற்றப்புலனாய்வு பிரிவு ஆய்வாளர் திரு.சந்திரசேகர் மற்றும் குற்றப் புலனாய்வு பிரிவு உதவி ஆய்வாளர் திரு.சரவணன் மற்றும் காவலர் திரு. சந்திரமோகன் அவர்களோடு நானும் மதியம் 13.20 மணிக்கு குள்ளஞ்சாவடி ஆலப்பாக்கம் மெயின் ரோட்டில் உள்ள மளிகை கடைக்கு சென்று அந்த பகுதியில் இருந்த தனிநபர் சாட்சிகளான திரு.சரவணன் த.பெ. கிருஷ்ணப்பன் மற்றும் பாலமுருகன் மற்றும் உடன் இருந்த உதவி ஆய்வாளர் திரு.சரவணன்

அவர்களையும் காவலர் திரு.சந்திரமோகன் அவர்களையும் சாட்சியாக வைத்து ஆஜர் எதிரியிடம் அவரின் கடையை சோதனை செய்ய இருக்கும் தகவலை சொல்லி 13.30 முதல் 14.00 மணி வரை சோதனை செய்தோம். சோதனை செய்ததில் அவர் கடையில் எந்த விதமான இரயில்வே பொருட்களும் அகப்படவில்லை என்று சோதனை ஜாபிதா தயார் செய்தேன்**(அந்த சோதனை ஜாபிதா அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் ஆஜர் எதிரியை விசாரித்து அவரிடம் வாக்குமூலம் பெற்றேன். அதில் அவர் "நான் எனது வீட்டில் நடத்திவரும் இரும்பு கடையை பற்றி கூறினேன். அந்த கடையை என் மனைவி இந்திராவும் இரண்டு வேலை ஆட்களும் பார்த்து கொள்கிறார்கள். எனது பழைய இரும்பு கடையை பார்க்க வேண்டும் என்று சொன்னால் நான் அழைத்து செல்கிறேன்" என்று சொன்னார். **(ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி எதிரி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அந்த இரும்பு கடைக்கு என்னையும் மேற்படி சாட்சிகளையும் அழைத்து சென்றார். பூட்டி இருந்த பழைய இரும்பு கடை குடோனை திறக்க சொல்லி 13.30 முதல் 17.00 மணிவரை சோதனையிட்டபோது அந்த குடோனின் தென்மேற்கு மூலையில் வெள்ளைநிற பாலித்தின் பேக் பண்டல் இருந்தது, அதை திறந்து பார்த்தபோது அதில் 27 ஜோடி O.H.E இரயில்வே காப்பர் டிராப்பர் ஒயரும் மற்றும் 100 எண்ணிகையில் காப்பர் லாக் பிளேட் (S.E.C 1163 என்ற அடையாளம் கொண்டது) மற்றும் 69 எண்ணிக்கையில் காப்பர் கிளிப்ஸ் (அடையாள குறியீடு K.H.A T.R.I 1192) மற்றும் 3 அடி நீளம் கொண்ட காப்பர் ஒயர் துண்டு மற்றும் 2 அடி நீளம் கொண்ட காப்பர் ஒயர் ஒன்று இருந்தது. அவை அனைத்தும் 13 கிலோ எடை இருந்தது. அவற்றிக்கு ஒரு சோதனை ஜாபிதா தயார் செய்து ஆஜர் எதிரி மற்றும் 2 தனிநபர் சாட்சிகள் மற்றும் இரண்டு இரயில்வே துறை சாட்சிகள் முன்னிலையில் மேற்கண்ட பொருட்களை கைப்பற்றினேன். **(அந்த சோதனை ஜாபிதா அசாஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** கைப்பற்றப்பட்ட பொருட்கள் மீது அடையாள துண்டு சீட்டுகள் ஒட்டப்பட்டது. அந்த இடத்திலேயே ஆஜர் எதிரியிடம் சாட்சிகள் முன்னிலையில் மறுஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. அதில் மேற்கண்ட கைப்பற்றப்பட்ட பொருட்களை அடையாளம் தெரியாத சைக்கிள் வியாபாரியிடம் வாங்கியதாக சொன்னார். **(மறு ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி எதிரி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் அசாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** விசாரித்த போது இரயில்வே பொருள் என்று தெரியாமல் இலாபம் அடையும் நோக்கில் வாங்கியதாக சொன்னார். அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.